# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
# TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

## அனைத்துலகத் தேர்வு
## 2019

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 7

சுட்டெண்: | | | | | | | | | |

நேரம்: 150 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ம் முறை | 2ம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 15 | | | |
| 6 | 05 | | | |
| 7 | 20 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

| | |
|---|---|
| 1ம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ம் முறை - பெயர் / ஒப்பம் | |

**1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.**

1. வன்னியின் ஆற்றல் மிக்க மன்னனாகத் திகழ்ந்தவன்

அ ) எல்லாளன் ☐ ஆ ) சங்கிலியன் ☐

இ ) கயிலை வன்னியன் ☐ ஈ ) சேனன் ☐

2. யாழ் ______________ வகையைச் சேர்ந்தது.

அ ) தோற்கருவி ☐ ஆ ) கஞ்சக்கருவி ☐

இ ) நரம்புக்கருவி ☐ ஈ ) துளைக்கருவி ☐

3. கத்தரித் தோட்டத்துக் காவலன் என்ற பாடலைப் பாடியவர்

அ ) சோமசுந்தரப்புலவர் ☐ ஆ ) விபுலாநந்தஅடிகள் ☐

இ ) ஔவையார் ☐ ஈ ) பாரதியார் ☐

4. வன்னிப் பெருநிலப்பரப்பு பழந்தமிழர் வாழ்ந்த பகுதியாகும். இச் சொல்லியம்

அ ) ஏவல் ☐ ஆ ) கூற்று ☐

இ ) வினா ☐ ஈ ) மெய்ப்பாடு ☐

5. இரட்டைக்கிளவிக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ ) புதுப்புது ☐ ஆ ) கலகல ☐

இ ) இன்பதுன்பம் ☐ ஈ ) ஊண் உறக்கம் ☐

6. தமிழ் மன்னர்களான சேனனும் குத்திகனும் இலங்கையை ஆண்ட ஆண்டுகள்

அ ) 44 ☐ ஆ ) 34 ☐

இ ) 22 ☐ ஈ ) 21 ☐

7. பங்கம் என்பது

அ ) சேறு ☐ ஆ ) வயல் ☐

இ ) காடு ☐ ஈ ) வானம் ☐

8. 'பாடிய' என்பது

அ ) பெயரெச்சம் ☐ ஆ ) வினையெச்சம் ☐

இ ) பெயர்ச்சொல் ☐ ஈ ) வினைமுற்று ☐

9. வெள்ளைத் தாமரை மலர்ந்து இருந்தது. இதில் வந்துள்ள எழுவாய் அடைமொழி

அ ) தாமரை ☐ ஆ ) இருந்தது ☐

இ ) மலர்ந்து ☐ ஈ ) வெள்ளை ☐

10. **இரக்கப்போனாலும் சிறக்கப் போ.** இப்பழமொழியின் கருத்து

அ ) வறுமையிலும் செம்மையாயிரு ☐

ஆ ) போலிப்பெருமை காட்டுதல் ☐

இ ) ஒற்றுமை நலன் தரும் ☐

ஈ ) மனநிறைவற்ற நிலை ☐

11. "தமிழோடு இசைபாடல் மறந்தறியேன்" எனக் கூறியவர்

அ ) இராவணன் ☐ ஆ ) திருநாவுக்கரசர் ☐

இ ) மோசிகீரனார் ☐ ஈ ) ஔவையார் ☐

12. அவனுடைய தாய் பொருட்களை அடுக்கினார். இதில் சுட்டுப்பொருளை உணர்த்தும் சொல்

அ ) தாய் ☐ ஆ ) பொருட்களை ☐

இ ) அடுக்கினார் ☐ ஈ ) அவனுடைய ☐

13. தொண்டைமான் இளந்திரையனிடம் வருவோர் ______________ வளமனைகளை நாடினர்.

அ ) உழவரது ☐ ஆ ) அரசனது ☐
இ ) புலவரது ☐ ஈ ) நண்பரது ☐

14. 'பைல்' கோட்டை கட்டப்பட்ட இடம்

அ ) ஆனையிறவு ☐ ஆ ) வெற்றிலைக்கேணி ☐
இ ) அரிப்பு ☐ ஈ ) புத்தளம் ☐

15. ஆய்ச்சிக்கு ஆயன் போல, இடைச்சிக்கு

அ ) உழவன் ☐ ஆ ) இடையன் ☐
இ ) புலவன் ☐ ஈ ) செல்வன் ☐

16. பின்வருவனவற்றுள் எதிர்மறை வினை

அ ) சென்றான் ☐ ஆ ) செல்கின்றான் ☐
இ ) செல்வான் ☐ ஈ ) செல்லான் ☐

17. அறிவுக்குப் பகையாக அமைவது

அ ) சினம் ☐ ஆ ) குணம் ☐
இ ) பணம் ☐ ஈ ) அன்பு ☐

18. தமிழ் + இனிமை என்பதைப் புணர்த்தி எழுதினால்

அ ) தமிழிஇனிமை ☐ ஆ ) தமிழினிமை ☐
இ ) தமிழ்இனிமை ☐ ஈ ) தமிலினிமை ☐

19. விபுலாநந்த அடிகள் பிறந்த ஊர்

அ ) நல்லூர் ☐ ஆ ) காரைதீவு ☐

இ ) சுன்னாகம் ☐ ஈ ) நவாலி ☐

20. அரங்கில் மக்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது. ______________ அங்கே பண்ணிசை விழா நடந்துகொண்டிருந்தது.

அ ) எனவே ☐ ஆ ) ஏனெனில் ☐

இ ) எது ☐ ஈ ) என்ன ☐

21. அன்னப்புள்ளின் கற்சிலை ________________ அமைந்துள்ளது.

அ ) திருநெல்வேலி நெல்லையப்பர் கோவிலில் ☐

ஆ ) மதுரை ஆயிரங்கால் மண்டபத்தில் ☐

இ ) மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் ☐

ஈ ) குடுமியாமலையில் ☐

22. தெளிவு என்பதன் எதிர்ச்சொல்

அ ) கலக்கம் ☐ ஆ ) உறக்கம் ☐

இ ) இழப்பு ☐ ஈ ) விழிப்பு ☐

23. அம்பு போன்ற விழி. இதில் வந்துள்ள உவமானம்

அ ) அம்பு ☐ ஆ ) கூர்மை ☐

இ ) விழி ☐ ஈ ) போன்ற ☐

24. "குன்றும் குழியும் குறுகி வழி நடந்து" என்னும் பாடல்

அ ) கனிவு ☐ ஆ ) போற்றல் ☐

இ ) இரங்கல் ☐ ஈ ) தாலாட்டு ☐

25. கதிரவனின் அன்புக்குரியவள்

அ ) மல்லிகை ☐ ஆ ) தாமரை ☐

இ ) ஆம்பல் ☐ ஈ ) அல்லி ☐

26. பின்வருவனவற்றுள் வேறுபட்ட சொல்

அ ) திங்கள் ☐ ஆ ) பரிதி ☐

இ ) பகலவன் ☐ ஈ ) வெய்யோன் ☐

27. திருவள்ளுவர் ஆண்டைக் கணக்கிட்டு நடைமுறைப்படுத்தியவர்

அ ) வீரமாமுனிவர் ☐ ஆ ) மறைமலை அடிகள் ☐

இ ) தேவநேயப்பாவாணர் ☐ ஈ ) தனிநாயகம் அடிகள் ☐

28. வினா எழுத்துகள்

அ ) 5 ☐ ஆ ) 4 ☐

இ ) 3 ☐ ஈ ) 2 ☐

29. நிலம், நீர், காற்று, வானம், தீ என்பன

அ ) ஐம்பால்கள் ☐ ஆ ) ஐம்பொறிகள் ☐

இ ) ஐம்புலன்கள் ☐ ஈ ) ஐம்பூதங்கள் ☐

30. இலங்கையில் கண்ணகி வழிபாட்டை தொடக்கி வைத்தவன்

அ ) சூரத்தீசன் ☐ ஆ ) அசேலன் ☐

இ ) கயபாகு ☐ ஈ ) விசயன் ☐

புள்ளிகள் 30

2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

கழக நூல்கள் என நமக்குக் கிடைத்துள்ள நூல்களில் அதிகமான பாடல்களைப் பாடியவர் கபிலர். இவரது பாடல்களைப் படிக்கும்போது புதுப்புதுக் கருத்துகள் தோன்றி மனத்திற்கு இன்பந்தரும். இவரது பாடல்கள் அனைத்தும் அறிவுக்கு விருந்தாய் அமைந்துள்ளன. ஐவகை நிலங்களுள் குறிஞ்சிப்பாடல்கள் பாடுவதில் மிகவும் வல்லவர். இவர் மலைக்காட்சிகளையும், காட்டில்நிகழும் இயற்கை நிகழ்ச்சிகளையும் கற்பனை நயமுறக் கூறுவதில் இணையற்றவர். பிரகத்தன் ஓர் அரசன். அவன் இசைக்கலையில் வல்லவன். பிரகத்தன் தமிழ் அறியும் நோக்குடன் தமிழகம் வந்தான். தமிழ் பயின்றான். தமிழின் மரபையும் மாண்பையும் மேலும் அறியும் நோக்குடன் கபிலரை நாடினான். தமிழ் கற்பித்தல் தமது தலையாய கடமை என்று உணர்ந்த கபிலர், பிரகத்தனுக்கு தமிழ்மொழியை நன்கு கற்பித்தார்.

1. நமக்குக் கிடைத்துள்ள கழக நூல்களில் அதிகமான பாடல்களைப் பாடியவர் யார்?

______________________________________

______________________________________

2. பிரகத்தன் எப்படிப்பட்டவன்?

______________________________________

3. பிரகத்தன் எந்நோக்குடன் தமிழகம் வந்தான்?

______________________________________

______________________________________

4. கபிலர் எப்பாடல்களைப் பாடுவதில் வல்லவர்?

______________________________________

______________________________________

5. கபிலரது பாடல்கள் எவ்வாறு அமைந்துள்ளன?

______________________________________

______________________________________

புள்ளிகள் 10

3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.

1. விபுலாநந்த அடிகளார் தமிழுக்குச் செய்த தொண்டுகளில் மிகவும் சிறந்தது எது?

______________________________

______________________________

2. விருந்தினரை எவ்வாறு வரவேற்க வேண்டுமெனத் திருக்குறள் கூறுகின்றது?

______________________________

______________________________

3. முடியரசர் செங்கோல் செலுத்த உலகை அரசாள்பவர் யார்?

______________________________

4. ஒழுக்கம் இல்லாதவனிடம் எது இல்லை என்று வள்ளுவர் கூறுகிறார்?

______________________________

______________________________

5. எல்லாள மன்னன் யாரை வெற்றி கொண்டான்? எல்லாளனது காலத்தில் எத்தனை தமிழ்ச் சிற்றரசுகள் இருந்தன?

______________________________

______________________________

6. இயற்கை உயிரினத்திற்கு அளித்த சூழல்தொகுதி எது?

______________________________

7. விசயன் காலத்துக்கு முன் இலங்கையில் வாழ்ந்த தமிழ் மரபினர் யாவர்?

______________________________

______________________________

| புள்ளிகள் 10 |
|---|

**4) தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக எழுதி, கவிதையை முழுமையாக்குக.**

## வள்ளுவர்

| | | | | |
|---|---|---|---|---|
| சொன்ன | அடியில் | வழியை | தந்த | குறள்வழி |

அன்னைத் தமிழில் திருக்குறளை
ஆக்கித் ______________ பெரும்புலவர் !
அறம் பொருள் இன்பம் மூன்றினையும்
அழகாய்ச் ______________ பெரும்புலவர் !

இரண்டு ______________ குறட் பாக்கள்
இனிதாய் எழுதிய தமிழ்ப் புலவர் !
வாழும் ______________ அழகாய்
வகுத்துத் தந்த பெரும்புலவர் !

வள்ளுவன் காட்டும் வழியிலே
வாழும் நெறியை வகுத்திடுவோம் !
நாளும் ______________ நடந்திடுவோம்
நலமே வாழ முயன்றிடுவோம் !

புள்ளிகள் 10

## 5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுக.

நெல் + வயல் ____________ அறம் + நெறி ____________

மா + காய் ____________ இசை + பாடல் ____________

கல் + தூண் ____________ பட்டு + ஆடை ____________

2. பின்வரும் வினைமுற்றுகளின் இடைநிலைகளைக் கண்டு எழுதுக.

தேடினான் ____________ நிற்பான் ____________

ஓடுகின்றனர் ____________ வரைந்தான் ____________

தருவான் ____________ கேட்பான் ____________

3. சொல்லின் முதலில் மட்டும் வரும் வினா எழுத்துகள் எவை? அவற்றிற்கு எடுத்துக்காட்டுகள் தருக.

________________________________________

________________________________________

4. வேற்றுமை உருபுகள் இடம்பெறுமாறு ஒவ்வொரு சொல்லியம் எழுதுக.

3 ஆம் ________________________________

4 ஆம் ________________________________

2 ஆம் ________________________________

5. பின்வருவனவற்றிற்கு ஒவ்வோர் எடுத்துக்காட்டுத் தருக.

வினையெச்சம் ____________

அடுக்குத்தொடர் ____________

ஆண்பால் ____________

முன்னிலை ____________

சினைப்பெயர் ____________

இடப்பெயர் ____________

புள்ளிகள் 15

**6) பந்தியை உமது வாழிடமொழியில் மாற்றி எழுதுக.**

கல்வி எல்லோருக்கும் இன்றியமையாதது. பழைய காலத்தில் எல்லோருக்கும் கல்வி கற்கும் வாய்ப்பு இருக்கவில்லை. ஆனால், இக்காலத்தில் எங்களுக்கு நல்ல கல்வியைப் பெறுவதற்கு பல வாய்ப்புகள் உள்ளன. எனவே, நாம் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி நன்கு கற்க வேண்டும். அப்படித் தொடர்ந்து கற்கும்போது நாம் அறிவாளியாக வருவோம்.

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

புள்ளிகள் 05

**7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து, 125 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- விபுலாநந்த அடிகள்

- எனது தாயகம்
  - தாயகம் அமைந்துள்ள இடம்
  - தாயகத்தில் உமது பெற்றோரின் ஊர்
  - தாயகத்தில் உள்ள வளங்கள் ( கடல், குளங்கள், ஆறுகள், மரங்கள் )
  - தாயகத்தில் உமக்கு பிடித்தவை

- பிறருக்கு உதவுவோம்
  - யார், யாருக்கு உதவுதல்
  - உதவும் வழிவகைகள்
  - உதவி செய்பவர் அடையும் பயன்கள்
  - உதவி பெறுபவருக்குக் கிடைக்கும் நன்மைகள்

புள்ளிகள் 20